மலர் 1 இதழ் 2 அக்டோபர், 2016 ISSN : 2454-3993

# சி.எம். முத்துவின் இனவரைவியல் நாவல்கள்

ந.முருகேசபாண்டியன்
மதுரை

பண்டைத் தமிழிலக்கியமான சங்க இலக்கியம், அடிப்படையில் நிலமும் பொழுதும் சார்ந்து மனித இருப்பினை மையப்படுத்தி விரிந்துள்ளது. பூமியில் ஒவ்வொரு நிலத்துக்குமென இயற்கையாக உருவாகியிருக்கும் தனிப்பட்ட பண்புகள், அங்கு வாழ்கிற அனைத்து உயிரினங்களின் இருத்தலையும் நுட்பமாகத் தீர்மானிப்பதைக் காலந்தோறும் இலக்கிய பிரதிகள் பதிவாக்கியுள்ளன. வளமையான முல்லை நிலத்தின் தெய்வமாக மாயோனும், வறண்ட பாலை நிலத்தின் தெய்வமாகக் கொற்றவையும் கொண்டாடப்படுவது, நிலத்துடன் தொடர்புடையது. மலையில் வேட்டையாடுகிற குறவர்களின் தொழிலுக்கும், பாலையில் திரிகின்ற எயிணர்களின் வழிப்பறித் தொழிலுக்கும் ஒருவகையில் மண்தான் காரணம். ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில் தலைமுறைகளாக வாழ்ந்து வருகின்ற குறிப்பிட்ட மக்கள் திரளின் செயல்பாடு, செறிவான முறையில் இனக்குழுத் தன்மைகளுடன் இருப்பது தவிர்க்கவியலாது. உலகமயமாக்கல், கார்ப்பரேட்களின் ஆதிக்க அரசியல் நிலவுகிற இன்றைய சூழலிலும், தமிழ் மொழியின் வழியாக அடையாளப் படுத்தப்படுவதைவிடத் தமிழர்கள், சாதி அடையாளத்தை முதன்மையாகக் கருதுகின்றனர். ஏற்றத்தாழ்வைப் பரப்பிடும் சாதியின் மேலாதிக்கம் என்பது, நிலத்தை முதன்மையாகக் கொண்ட கிராமத்தினரிடம் வலுவாக உள்ளது. அதிலும் பல நூற்றாண்டுகளாகக் காவிரி ஆறு பாய்ந்து செழித்திருக்கும் டெல்டா பகுதியில், நிலத்துடனான உற்பத்தி உறவுமுறையானது, பண்பாட்டுரீதியில் ஏற்படுத்தியிருக்கும் தாக்கம் அளவற்றது. நிலமான்ய அமைப்பு உருவாக்கியிருக்கும் ஆண்டான்-அடிமை உறவு ஒருபுறம் எனில், இந்திய மண்ணிற்கே உரித்தான சநாதனம் உருவாக்கி இருக்கும் சாதிய மேல்-கீழ் அடுக்கு இன்னொருபுறம் ஆதிக்கம் செலுத்துகிறது. வயலின் உரிமையாளர்கள் பெரும்பாலும் ஆதிக்க சாதியினர் அல்லது உயர் சாதியினர் என்றால் வயலில் இறங்கி வேலை செய்கிற விளிம்புநிலையினர் ஒடுக்கப்பட்ட சாதியினராகவே உள்ளனர். இத்தகைய சூழலில் தஞ்சை மண்ணுக்கே உரித்தான நிலவுடமைப் பின்புலத்தில்

மக்களின் வாழ்க்கையைப் பதிவு செய்வதில் சி.எம்.முத்துவின் நாவல்கள், இனவரைவியல் தன்மையுடன் தனித்து விளங்குகின்றன. ஐம்பதாண்டுகளாகாகத் தஞ்சை வட்டாரத்தில், கிராமிய வாழ்க்கை எப்படி இருந்தது என்பதைத் தொடர்ந்து தனது நாவல்களில் பதிவாக்கி வரும் சி.எம்.முத்துவின் புனைவுலகு, குறிப்பிட்ட வரையறைக்குள் அழுத்தமான கேள்விகளை எழுப்புகிறது.

நிலத்தின் இயல்பில் நீர் திரிந்து, செம்புலப் பெயல் நீராக மாறுவது போல, தஞ்சை மண்ணுக்கெனத் தனித்த அடையாளங்களுடன், கிராமத்து வாழ்க்கை தனித்திருக்கிறது. அறுபதுகளில்கூடத் தஞ்சை மண்ணில் செழிப்புடன் வாழ்ந்த பிராமணர் சாதியினரான பண்ணையார்களின் கதைகள் இசை, நடனம் என்ற கலைப் பின்புலத்தில் சுவராசியமான மொழியில் புனைகதைகளாகின. மௌனி, கு.ப.ரா., தி.ஜானகிராமன் போன்ற படைப்பாளர்கள் சித்திரித்த உலகம், மேல்தட்டினரின் வாழ்க்கைக்கு முக்கியத்துவம் தந்தது. கீழ்வெண்மணியில் 44 தலித்துகள் உயிரோடு தீ வைத்துக் கொல்லப்பட்ட சம்பவம், பன்னெடுங்காலமாகத் தஞ்சை மண்ணில் நிலவிய சாதிய ஆதிக்கம், பொருளியல் ஏற்றத்தாழ்வின் வெளிப்பாடுதான். தஞ்சை மண்ணில் வாழும் மக்களின் நிலத்துடனான உறவு, தஞ்சை வட்டார மொழி, பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், தெய்வ வழிபாடு, சாதிய ஒடுக்குமுறை போன்ற அம்சங்களுக்கு முன்னுரிமை தந்து நாட்டார் மரபினில் எழுதப்பட்ட கதைகள் குறைவு. தஞ்சை வட்டார இலக்கியம் என்றால் தி.ஜானகிராமனின் மோகமுள் என்று பொதுப்புத்தியில் உருவாக்கப்பட்டிருப்பதற்கு மாறான நாவல்கள் என்றால், என்றால் சி.எம்.முத்துவின் யதார்த்த நாவல்களைச் சொல்ல வேண்டும். சி.எம்.முத்து பல்வேறு காலகட்டங்களில் தஞ்சை வட்டாரக் கள்ளர் சாதியினரை மையமிட்டு எழுதியுள்ள நெஞ்சின் நடுவே (1982), கறிச்சோறு (1989), பொறுப்பு (2000), வேரடி மண் (2003), அப்பா என்றொரு மனிதர் (2010) ஆகிய ஐந்து நாவல்கள் மட்டும் ஆய்விற்குட்படுத்தப்பட்டுள்ளன. கள்ளர் சாதியினரின் வாழ்க்கைப் பின்புலத்தில் விவரிக்கப்பட்டுள்ள நாவல்கள், இனவரைவியல் தன்மையுடன. கள்ளர் சாதியைச் சார்ந்தவரான சி.எம்.முத்து, கள்ளர் சாதியில் பிறந்தவர்களின் சமூக வாழ்க்கையை முன்வைத்துப் புனைவாக எழுதினாலும் ,கதைப்போக்கின் நம்பகத்தன்மை காரணமாக, அவருடைய நாவல்கள் மானுடவியல் நோக்கில் சமூக ஆவணமாகியுள்ளன.

தமிழகத்தின் பிற பகுதிகளுக்கும் தஞ்சை நிலப்பரப்பினுக்கும் பருண்மையான வேறுபாடுகள் உண்டு. வற்றாத காவிரி ஆறு பாய்ந்து, எங்கும் செழிப்பான பூமியில் மண்ணை நம்பி வாழ்ந்தவர்கள், பாரம்பரியம் என்ற பெயரில் சாதியக் கட்டுமானத்திற்கு முக்கியத்துவம் தந்தனர். இறுக்கமான முறையில் நிலவுகிற சாதியத்தின் கோரப்பிடியில் சிக்கியவர்களின் கதையைக் கறிச்சோறு நாவலில் சி.எம்.முத்து பதிவாக்கியுள்ளார்.. தஞ்சை வட்டாரத்தில் வாழும் கள்ளர் சாதியினருக்கிடையில்தான் ஏகப்பட்ட உட்பிரிவுகள். ஏதோ ஒரு அளவுகோலினால் கள்ளர் சாதியினரிடையே உயர்வுதாழ்வு கற்பிக்கப்படும் சூழல் வலுவாக உள்ளது. வாகரைக் கள்ளர் உயர்ந்தவர்கள் என்ற நிலையினை மறுதலித்துவிட்டு, முத்துக்கண்ணு விசுவராயர், பத்து மைல் தொலைவில் இருக்கும் நெல்லுப்பட்டுக் கிராமத்தில் தனது மகள் கமலாவிற்குச் சம்பந்தம் பேச முயலுகிறார். அவருடைய நிலைப்பாடு, அதே ஊரைச் சார்ந்த தருமையா நாட்டாருக்கும் கோபால் குச்சிராயருக்கும் சுத்தமாகப் பிடிக்கவில்லை. தெக்குச்சீமைக் கள்ளருக்குப் பெண்ணைத்

தருவது முறையன்று எனப் பிரச்சினையை ஊருக்குப் பொதுவானதாக மாற்றுகின்றனர். குச்சிராயர் இளைஞர்களைக் கூட்டி வைத்து, அவர்கள் வசிக்கும் ஊர் புனிதமானது, ரொம்பவும் லௌகீகமானது தெக்குச்சீமையில் திருமண உறவு வைத்துக் கொண்டால், எல்லாம் கெட்டுவிடும் என்று விசுவராயருக்கு எதிராகத் தூண்டி விடுகிறார். கமலத்திற்கும் அதே ஊரிலிருக்கும் வந்தாருகுடி என மட்டமாக அழைக்கப்படும் சாம்பவசிவம் என்ற இளைஞனுக்கும் இடையில் காதல் என்ற தகவல் அறிந்தவுடன், விசுவராயர் உள்ளிட்ட ஆதிக்கவாதிகள் பதறுகின்றனர். வடுவக்குடி கள்ளர்கள் அறுத்துக் கட்டுகிற வழக்கமுடையவர்கள் என்பதற்காகச் சாம்பசிவத்தைக் கேவலமாகப் பேசுகிறார்கள், சாதிய வெறியர்கள். கமலத்தின் அண்ணன் தங்கவேலுவின் ஒத்துழைப்புடன் காதலர்கள் இணைந்திட முயலுகின்றனர். ஊர்ப் பெரியவர்கள் திருமணத்தைத் தடுத்திட ஆள் கடத்தல், கொலை முயற்சியில் ஈடுபடுகின்றனர். ஆனால் சாம்பசிவம் ஊர்த்திருவிழாவில் கிடாய் வெட்டிக் கறிச்சோறு போடுகிறான் என்றவுடன், விருந்தில் சாப்பிடுவதற்காக அவனுடைய வீட்டிற்குக் கூட்டமாகக் கிளம்புகின்றனர். வன்முறையாளர்களான ஊர்ப் பெரிய மனிதர்களின் யோசனை காரணமாக மாயாண்டிக் கொத்தபிரியன், தங்கவேலுவின் தலையைத் துண்டாக்குகிறான்.. ஊரின் கௌரவத்திற்காக, தனது மகனைக் கொலை செய்யத் தூண்டிய நாயக்கரைக் கொல்வதற்காக விசுவராயர் கத்தியுடன் பாய்கிறார். சாதியின் புனிதம் காப்பதற்காக அநியாயமாகக் கொல்லப்படுகிற மனிதர்களின் எண்ணிக்கை பெருகுகிறது.

ஒரே சாதிக்குள் பேதங்களை உருவாக்கி, வீண் பெருமை பேசும் சாதிய விசுவாசிகள் அடிப்படையில் பண்ணையார்கள். கிராமத்தினரைச் சாதியத்தின் போலிப் பெருமையை மூழ்கடிக்குகின்ற சமூக நிலையை சி.எம்.முத்து கேள்விக்குள்ளாகியுள்ளார். முப்போகம் விளைகிற வயல் வெளி நிரம்பிய வளமான கிராமத்தில் மனிதர்கள் வக்கிரமான மனநிலையுடன் வன்முறையை எங்கும் பிரயோகிப்பது ஏன் என்ற கேள்வி தோன்றுகிறது. எண்பதுகளில் நிலவிய சாதியத்தின் கோரமுகத்தை தஞ்சைக் கிராமப் பின்புலத்தில் சி.எம்.முத்து அழுத்தமாகப் பதிவாக்கியுள்ளார். கதைசொல்லலில் செயற்கையான சம்பவங்கள் இடம் பெற்றிருந்தாலும், கிராமம் சார்ந்த பின்புலம், வாசிப்பினில் நம்பகத்தன்மையை ஏற்படுத்துகிறது. கறிச்சோறு நாவல் விவரிக்கும் சாதியத்தின் பெருமையை முன்னிட்டு நடைபெறும் நிகழ்வுகள், தமிழகத்தில் உள்ள எல்லா ஆதிக்க சாதியினருக்கும் பொருந்தும். ஒரே சாதிக்குள் பிளவுகளை ஏற்படுத்தி, மேல்/கீழ் கற்பித்துக் குறிப்பிட்ட பகுதியில் வசிக்கிறவர்களை ஒதுக்குகிற போக்கு, இன்றளவும் தமிழகமெங்கும் நடைமுறையில் இருக்கிறது. தலித்துகள் இடையிலும் இதுபோன்ற போக்கு நிலவுகிறது. வருணாசிரமப் போக்கை வலியுறுத்தும் மனுவின் ஆட்சி தமிழகத்தில் இன்றும் ஆதிக்கம் செலுத்துகிறது என்பதை சி.எம்.முத்து வகைமாதிரியாகச் சொல்லியுள்ளார் எனவும் கறிச்சோறு நாவலை வாசிக்க முடியும். சாதி பற்றிப் பேசினால் கேவலம் எனத் திராவிட இயக்கம் உருவாக்கியிருந்த நிலைமைக்கு மாறாகச் சி.எம்.முத்து. பொறுப்பு நாவலில் கள்ளர் சாதியினர் பற்றிப் பதிவாக்கியுள்ளார். சாதியின் பெருமையைப் பேசுவது சி.எம்.முத்துவின் நோக்கம் அல்ல. இன்று சாதி எப்படியெல்லாம் கிளைவிட்டுப் பரந்திருக்கிறது என்ற நோக்கில், சாதிக்குள் சாதியாக விரிந்திருக்கும் சாதிய அரசியலை முன்வைத்துக் கறிச்சோறு நாவலை உருவாக்கியுள்ளார்.

சாதியத்தின் மேலாதிக்கத்தில், தனிமனித விருப்புவெறுப்புகளுக்கு அர்த்தம் எதுவும் இல்லை. குடும்ப உறவுகள் என்ற எல்லையை மீறி எதுவும் செய்ய முடியாத கிராமத்து வாழ்க்கை பற்றிப் பொறுப்பு நாவலில், சி.எம்.முத்து சித்திரிக்கும் சம்பவங்கள், பண்டைய இனக்குழு வாழ்க்கையின் எச்சங்கள். அகமணத் திருமணமுறை பன்னெடுங்காலமாக நீடிக்கும் தமிழர் வாழ்க்கையில், மாமன்-அத்தை வழியிலான திருமண உறவினுக்கு முக்கியத்துவம் தருவதை தஞ்சைக் கிராமத்து வாழக்கையுடன் சொல்லப்பட்டுள்ள நாவல், வட்டாரத் தன்மையுடன் விரிந்துள்ளது. பள்ளியூர் ஊர்ப் பண்ணையாரான வாஞ்சிநாத மாங்கொண்டாரின் தங்கையான ரஞ்சிதத்தின் கணவர் சாமிநாத குருக்கொண்டார். மாங்கொண்டாரின் மனைவியான சரசுவதி, குருக்கொண்டாரின் தங்கை. இருவரும் மைத்துனர்கள். மாங்கொண்டாரின் மகன் கிருஷ்ணமூர்த்திக்கும் குருக்கொண்டாரின் மகள் வசந்தாவிற்கும் இடையிலான திருமணப் பேச்சு, வசந்தாவின் ஜாதகத்தில் இருக்கும் செவ்வாய் தோஷத்தினால் தடைபடுகிறது. மாங்கொண்டார் வேறு இடத்தில் மகனுக்குப் பெண் பார்ப்பதால், குருக்கொண்டார் கோபமடைகிறார்.

மாங்கொண்டார், தென் சீமையான கம்பர்நத்தம் ஊர்ப் பண்ணையாரான் பொன்னுச்சாமி தென்னம்பிரியார் - மங்களாம்பாள் மகள் பத்மாவைத் தனது மகன் கிருஷ்ணமூர்த்திக்குப் பேசி முடித்துப் பரிசம் போடுகிறார். தென்னம்பிரியாரின் மைத்துனரான பனையக்கோட்டை மிராசுதார் முத்தையா குச்சிராயர் சம்மதம் இல்லாமல் பரிசம் நடைபெறுகிறது. குச்சிராயரின் தங்கையான மங்களாம்பாளைத் தென்னம்பிரியாரும், தென்னம்பிரியாரின் தங்கையான கோதைநாயகியைக் குச்சிராயரும் திருமணம் செய்துள்ளனர். குச்சிராயர் ஏற்கனவே தென்னம்பிரியாரின் மகன் சண்முகத்தை படிக்க வைத்து டாக்டராக்கியவர். அவன் அவருடைய மகளைத் திருமணம் செய்யாமல், வேறு பெண்ணை மணம் முடித்ததால், இரு குடும்பங்களுக்கிடையில் பேச்சுவார்த்தை இல்லை.

குடும்ப உறவுகளில் கசிந்திடும் வாழ்க்கையின் வெக்கை எங்கும் வீசிக்கொண்டிருந்த அறுபதுகளின் காலகட்டத்தில் சொல்லப்பட்டுள்ள கதையில், மாமன் உறவு பற்றிய விவரிப்பு முக்கியமானது. பெண் அல்லது பையனுக்குத் திருமணப் பேச்சு தொடங்குவதற்கு முன்னர் உரிமையுள்ள வீட்டில் பையன் அல்லது பெண் இருந்தால், அவர்களின் சம்மதம் கேட்க வேண்டியது அவசியம். மீறி வேறு இடத்தில் முயன்றால், மாமன் மகளைத் தூக்கிச் சென்று திருமணம் செய்துகொள்வது ஏற்புடையது. பெண் என்பவளின் மனசு பற்றி யாருக்கும் அக்கறையில்லாத நிலவுடைமைச் சமூகத்தில், பெண்ணைப் பொருளாகக் கருதும் நிலை நிலவியது. பொறுப்பு நாவலில் இடம் பெற்றுள்ள ஆண்கள், தங்கள் விருப்பத்தினுக்கேற்பப் பிள்ளைகளின் திருமண முயற்சிகளில் ஈடுபடும்போது, அம்மாகள் வெறுமனே பார்வையாளராக இருக்கின்றனர். மேலும் எதிர்நிலையில் முரண்படும் சொந்த அண்ணன்கள்மீது பாசம் கொண்டிருந்தாலும், கணவனின் பேச்சை மீறி எதுவும் செய்யமுடியாமல் திணறுகின்றனர். மச்சினன்மீது பகைமைகொண்டு, செயல்படும் தென்னம்பிரியரின் செயலின் விளைவு குறித்துக் கவலைப்படும் மகள் பத்மா, மாமா குச்சிராயர் திடீரென வந்து தன்னைத் தூக்கிட்டுப்போய் மகன் ஆறுமுகத்திற்குத் திருமணம் செய்யலாம் என நினைக்கிறாள். மாமன்- மச்சான் உறவு விட்டுப் போய்விடக்கூடாது என்ற நிலையில், கூடுதலான உறவின் காரணமாக ஒருவர்மீது

இன்னொருவர் செலுத்தும் அன்பு, ஒருநிலையில் ஆதிக்கமாக மாறுகிறது." ஒம்மாள எப்படி நா கொண்டாந்து கட்டிக்கிட்டேனோ அப்படி மச்சினன் மவளத் தூக்கிக்கிட்டு வந்து தாரேன் கட்டிக்கடா" என்று குச்சிராயர், தனது மகனிடம் சொல்வது, எதையும் செய்ய முடியும் என்ற வீறாப்பின் வெளிப்பாடு.

கிராமத்தில் சிலர் ஏதாவது முடிச்சுப் போட்டு, சிக்கலை உருவாக்குவதில் கில்லாடியாக இருப்பார்கள். முன்னர் வளமாக வாழ்ந்த காட்டேரித் தாத்தா, இன்றைய வறுமையான சூழலிலும், வில்லங்கமான வேலையைச் செய்கிறார். ஏன் இப்படி செய்கிறார்கள் என்ற கேள்விக்கு விடை இல்லை. குருக்கொண்டார் மச்சினனைப் புறக்கணித்துவிட்டு வேறு ஊரில், மகளுக்குப் பெண் பார்க்க முயலும்போது, மங்கொண்டாரை அங்கு போகுமாறு ஆலோசனை சொல்வதும் காட்டேரித்தாத்தாதான்.

பெண்கள் வீட்டுக்குள்ளேயே அடங்கியொடுங்கி இருக்க வேண்டும் என்பதைப் பெண்களே ஏற்றுக்கொண்ட சூழலில், கதைப் பின்புலம் விரிந்துள்ளது. "அநேகமாக இந்த ஊருப் பெண்களைத் தெருப் பக்கத்திலோ திண்ணைப் பக்கத்திலோ அசந்துகூடப் பார்த்துவிட முடியாது". பெண்களின் உலகம் என்பது சுவர்களுக்குள் முடங்கிய நிலையில் ஆண்கள் எடுக்கிற முடிவுகள்மீது மறுப்பு அல்லது விமர்சனம் இருந்தாலும் மறுத்துப் பேசிட இயலாத சூழல் நிலவுகிறது. என்றாலும் பிரச்சினை முற்றியபோது, பத்மாவை அழைத்துக்கொண்டு மங்களாம்பாள், தனது அண்ணன் குச்சிராயர் வீட்டிற்குப் போய் பேசுகிற பேச்சுகள், நாவலின் திருப்புமுனை. பிள்ளைகளின் திருமணம் காரணமாகக் கசப்பும் வெறுப்பும் அடைகிற பெற்றோர், இறுதியில் மனமாற்றம் அடைகின்றர். காலங்காலமாகத் திருமணம் என்ற பந்தத்தில் இணைந்து சொந்தமாகப் பெருகுகின்றவர்கள், பின்னர் திருமணத்தின்பொருட்டு ஒருவரையொருவர் எதிரியாக வெறுத்து, செத்துப் போனவர்களாகக் கருதி ஒதுக்குவது, ஒருவகையில் நகைமுரண். அன்றைய காலகட்டத்தில் ஒரே சாதிக்குள் ஒன்றாக வாழ்ந்தவர்கள், முரண்பட்டாலும், குடும்ப உறவிற்குள் கசிந்து உருகுவது, நாவலில் அழுத்தமாகப் பதிவாகியுள்ளது.

தஞ்சை வட்டாரக் கள்ளர் சாதியில் நிலவுகிற உட்பிரிவுகளான ராஜாளியார், கருப்புட்டியர், விசுவராயர், மழவராயர், வாண்டையார், ஓந்தியார், நாயக்கர், கரைமீண்டார், குச்சிராயர், குருக்கொண்டர், மங்கொண்டார், தென்னம்பிரியார் பற்றிய பதிவுகள் குறிப்பிடத்தக்கன. வில் வண்டி முதலாகத் திருமணப் பரிச முறை பற்றிய விவரிப்பு, நாவலைச் சுவராசியம் மிக்கதாக்குகின்றன. இன்றைய உலகமயமாக்கல் கட்டத்தில், மதிப்பீடுகள் வீழ்ச்சியடைகிற நிலையில், அறுபதுகளில் வாழ்ந்த மனிதர்களின் குடும்ப உறவுகளை முன்வைத்து, அன்றைய சமூகச் சூழலைப் பதிவாக்கியுள்ள பொறுப்பு நாவல், இனவரைவியல் பதிவாகும்.

சி.எம்.முத்து எழுதிய முதல் நாவலான நெஞ்சின் நடுவே, அறுபதுகளில் தமிழகக் கிராமங்களில் நிலவிய ஆதிக்க சாதியினரின் பாலியல் அத்துமீறல்களைப் பின்புலமாகக் கொண்டுள்ளது. வயலில் உழைக்கின்ற ஒடுக்கப்பட்டவர்களைத் தீண்டத்தகாதவர்கள் என ஒதுக்குகிறவேளையில், அந்த இனத்துப் பெண்ணுடல்களைப் பாலியல் வேட்கைக்குள்ளாக்குதல் சாதாரணமாக நடைபெற்றது. தஞ்சை கிராமத்து வாழ்க்கையில் இரு வேறு உலகமாக வாழ்ந்தவர்களில், உழைப்பாளிகளான தலித்துகள் பட்ட துயரங்கள் அளவற்றவை. வயல்களும் வாய்க்காலும் சூழ்ந்த சிறிய கிராமத்தில் கண்ணுக்கெட்டிய

தொலைவுவரை பச்சை பசும் பயிர்கள் கோரைப்புற்கள் நொச்சீ ஆடாதொடை. புராதனமான கோவில், அல்லி பூத்திருக்கும் குளம், குடிசைகள். இப்படியான வளமான கிராமத்தில் வாழ்கின்ற மனிதர்களில்தான் எத்தனை நிறங்கள்?

வடிவேல் மழவராயர், நாராயணசாமி சேனை நாட்டார், நமசுமல்லிக் கொண்டார் சோழகர் எனக் கிராமத்து மனிதர்கள் நாவலில் அசலாகப் பதிவாகியுள்ளனர். மழவராயரின் மகன் அண்ணாமலை, அவனது நண்பன் சின்னத்தம்பி, காதலி வளையாபதி, வில்லங்கமான இராமலிங்கம் நாவலில் முக்கிய பாத்திரங்கள். கிராமத்தில் என்னவோ இயற்கை எழில் கொஞ்சினாலும், அங்கு ஒவ்வொருவரின் அடையாளமும் துல்லியமானவை. சின்னத்தம்பி தனது தங்கை கௌசல்யா 20 வயதில் கணவனை இழந்ததால், அவளுக்கு மறுமணம் செய்ய முயற்சிக்கிறான். ஆனால் செம்மங்குடி ஊரின் மரியாதை கெட்டுப் போய்விடும் அறுத்துக் கட்டுற ஊர் என்ற பெயர் வந்துவிடும் என்று சண்டியர் இராமலிங்கம் தேநீர்க்கடையில் சின்னத்தம்பியைத் தாக்குகிறான். ஊர்க்கூட்டம் போட்டு கௌசல்யாவிற்கு மறுமணம் செய்தால், ஊரைவிட்டு ஒதுக்கி வைத்து விடுவோம் என எச்சரிக்கின்றனர். ஆனால் இராமலிங்கம் வயலில் வேலைக்கு வருகிற தலித்துப் பெண்களுடன் பாலியல் உறவு வைத்துக்கொள்வதற்காக அலைகிறான். பள்ளர் சாதியைச் சார்ந்த திருமணமான வளையாபதிக்குத் தொடர்ந்து இராமலிங்கம் தொல்லை கொடுக்கிறான். அண்ணாமலைக்கும் வளையாபதிக்கும் இடையில் உறவு தொடர்கிறது. ஊரில் இருக்கிற பெரும்பாலான ஆண்கள், பள்ளர் இனத்துப் பெண்களுடன் உறவு வைத்திருப்பதைப் பெருமையாகக் கருதுகின்றனர். அதே நேரம் இளம் விதவையான கௌசல்யாவிற்குத் திருமணம் நடந்தால், கள்ளர் சாதியின் பெருமைக்கு இழுக்கு வந்துவிடும் என்று அரற்றுகின்றனர். வெளியே இருந்து பார்க்கும்போது, எளிமையாகத் தோன்றும் கிராமத்தில் கண்காணிப்பு என்பது சாதிய அடிப்படையில் வலுவாக இருக்கிறது என்பதை சி.எம்.முத்து பதிவாகியுள்ளார். தொட்டால் தீட்டு என ஆசாரம் பார்க்கும் உயர்சாதியினரின் பாலியல் வேட்கைக்குப் பலியாகும் ஒடுக்கப்பட்ட பெண்களின் அவலநிலைக்கான காரணத்தைச் சின்னத்தம்பி மூலம் நாவலாசிரியர் குறிப்பிட்டுள்ளார். "அவளுங்க என்னதான் வேர்க்கவேர்க்க வேலை செஞ்சாலும் ராத்திரிக்கு வடிக்க அரிசியில்லாமத்தானே தவிக்கிறாளுங்க. வேலையை வாங்கிட்ட முதலாளி சரியானபடி கூலி கொடுக்க மேஷ ரிஷபம் பார்க்கிறான். தண்ணியும் பருக்கையுமா தின்னுகிட்டு நமக்கு அடிமைகளாக உழைக்கிறாங்க. காத்தடிச்சா கூரை மேக்காத்துல பறந்து போயிடுது. மழை பேஞ்சா வூட்டுக்குள்ளே கொளமா தண்ணி தேங்கிக்குது". விளிம்பு நிலையினரின் அவல வாழ்க்கையின் ஊடாகச் சண்டியராகத் திரியும் ஆதிக்க சாதியினரால் எளிதாக அத்துமீறப்படும் பெண்ணுடல்கள் நாவலில் கேள்வியை எழுப்புகின்றன. சி.எம்.முத்து தனது முதல் நாவலில் யதார்த்தமான கிராமத்து மனிதர்களைச் சித்திரித்துள்ளார். பாலியல் ஒழுக்கக்கேட்டைச் சாதாரணமாகச் செய்கிற கள்ளர் சாதியினர், இளம் வயதில் விதவையான சொந்த சாதிப் பெண்ணை ஆசாரம் என்ற பெயரில் ஒடுக்குவதை எதிரிணையாக முன்வைத்துப் புனைவாக்குவதுதான் நாவலாசிரியரின் நோக்கமா? யோசிக்க வேண்டியுள்ளது.

வேரடி மண் நாவல் தஞ்சைப் பகுதியில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை முன்வைத்து எழுதப்பட்டுள்ளது. கீழ்த்தஞ்சையில் தாழ்த்தப்பட்ட, விவசாயக் கூலித் தொழிலாளர்களை

வெறுமனே அடிமைகளைப் போல நடத்திய பண்ணையார்களின் ஆதிக்கத்திற்கு எதிரான அரசியல் விழிப்புணர்வு பரவலானது. கீழ் வெண்மணியில் தீயிலிட்டுக் கொல்லப்பட்ட 44 தலித்துகள் மீதான வன்முறையின் பின்னர் பொருளாதாரச் சுரண்டலும் உள்ளது என்பதைப் புரிந்துகொண்ட விளிம்புநிலையினரின் எழுச்சியின் விளைவுகள் எப்படி இருக்கும் என்பதை சி.எம்.முத்து வேரடி மண் மூலம் விவரித்துள்ளார் கொட்டும் மழைக்குப் பயந்து, செவுட்டு மாரியம்மன் கோவிலுக்குள் ஒதுங்கிய தலித்துகளான அம்மாசியையும் அவரது மகளான சின்னாத்தாளையும் தற்செயலாக அங்கே வந்த சின்னையா, கோவிலைவிட்டு வெளியே பிடித்துத் தள்ளினார். ஊர்ப் பண்ணையாரான மாணிக்கம் பிள்ளை, அம்மாவாசியை அடித்து உதைக்கிறார். பள்ளர் சாதியினரின் நாட்டாமையான அம்மாசியை அடித்தது, சேரிக்குள் பெரும் புயலைக் கிளப்பியது. பண்ணையாரின் வயலில் இறங்கி வேலை செய்ய மறுத்து, தங்களுடைய எதிர்ப்பைத் தெரிவித்தனர். மாணிக்கம் பிள்ளை வெளியூர் ஆட்களை வைத்து வயல் வேலை செய்ய முயன்றபோது ஏற்பட்ட கைகலப்பில், இரு பக்கமும் வெட்டுக்குத்தானது. சேரி மக்களைக் காவல்துறை கைது செய்திட, பெண்களும் குழந்தைகளும் உணவு இன்றிப் பசியால் துடித்தனர். தலித்தான சின்னச்சாமியும் மாணிக்கத்தின் தம்பி மகனான தனபாலும் சேர்ந்து விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தினர். சிவப்புக் கொடி பறக்கத் தொடங்கியது. கூலி விவசாயிகளான பள்ளர்கள், தன்மான உணர்ச்சியினால் வீறு கொண்டெழுந்து, ஒன்று திரள்கின்றனர். பண்ணையார்களான வேர்களைத் தாங்கிப் பிடிக்கும் மண்ணாக இருப்பவர்கள், வயலில் வேலைசெய்யும் கூலிகளான தலித்துகள்தான் என்ற உண்மையை இரு பக்கத்தினரும் புரிந்துகொண்டபோதும் நிலமையில் மாற்றம் இல்லை. காலங்காலமாகத் தங்களை அடிமைகளாக அடக்கி ஒடுக்கியவர்களின் மீதான தலித்துகளின் கோபம், சீக்கிரம் தீர்ந்துவிடாது.

ஆண்டாண்டு காலமாக ஆண்டை சொல்வதே வேதவாக்கு என நம்பியிருந்தவர்களிடையே விழிப்புணர்வு ஏற்பட்டதற்குக் காரணம் பொதுவுடைமைக் கட்சி என்பதை நாவலாசிரியர் சுட்டியுள்ளார். கூலியாகத் தரப்படும் நெல்லின் அளவைக் கூட்ட வேண்டிப் போராடிய தலித்துகளை அநியாயமாகக் கொன்று குவித்த தஞ்சை வட்டாரத்து ஆதிக்க சாதிப் பண்ணையார்களின் மனநிலையைப் புரிந்துகொள்ள வேரடி மண் நாவல் உதவும். இனிமேல் தெய்வம், கோவில், சாதி, பழக்கவழக்கம் போன்ற பெயர்களில் விளிம்புநிலையினரை அடக்கியொடுக்க இயலாது என்பது நாவல் தரும் செய்தி. நெஞ்சினில் நடுவில் நாவலில் வாயில்லாப் பூச்சிகளாகச் சித்திரிக்கப்பட்டிருந்த தலித்துகள், வேரடி மண்ணில் துணிவுடன் ஒடுக்குமுறைக்கு எதிராகக் கிளர்ந்தெழுவது மாறி வரும் சமூகச் சூழலைக் காட்டுகிறது.

எழுபதுகளுக்குப் பின்னர் காவிரியில் தொடர்ந்து வெள்ளம் வருவது நின்று போனது. இயற்கை உரத்திற்கு மாற்றாக வேதியியல் உரம், பூச்சிக்கொல்லி மருந்து என விவசாயம் மாறியது. வயலில் வேலை செய்வது, கௌரவக் குறைச்சலாகக் கருதப்பட்டது. உழவுக்கான கூலி பன்மடங்கு கூடியது. சிறு விவசாயிகளின் பொருளாதாரநிலை நலிவடைந்தது. உழுதவன் கணக்குப் பார்த்தால் உழவுக்கோல் மிஞ்சாது என்ற பழமொழி நிஜமானது. அப்பா என்றொரு மனிதர் நாவல்மூலம் இன்றைய தஞ்சை டெல்டா விவசாயியின் துயர வாழ்க்கை சொல்லப்பட்டுள்ளது. சரவணன் என்ற இளைஞனின்

கண்ணோட்டத்தில் அவனது அப்பாவான சந்தரகாசு குச்சிராயர், மிராசு என்ற பட்டத்துடன் மண்ணுடன் போராடிய கதையை சி.எம்.முத்து விவரித்துள்ளார்.

இயற்கையுடனான வாழ்க்கை வாழ்ந்திடும் கிராமத்து விவசாயிக்கு எல்லாம் நம்பிக்கைதான் மூலதனம். நிலம் மட்டுமல்ல, வீடு, சுற்றத்தினர், கிராமத்தினர் என விரியும் சூழலில் வாழ்ந்திடும் அப்பாவான குச்சிராயர், டெல்டா விவசாயிகளின் வகைமாதிரி. உழுது, விதை விதைத்து, நாற்றுப் பிடுங்கி, தொழியில் நட்டு, களை பறித்து, நீர் பாய்ச்சி, உரம் போட்டு, காவல் காத்து, அறுவடை செய்து, மகசூல் நெல்லைக் கடன்காரனுக்குக் குடுத்துவிட்டு, மீண்டும் அடுத்த வருஷ உழவில் விடிவு கிட்டும் எனக் காத்திருக்கும் மனிதர்களை என்னவென்று சொல்ல? அதிலும் திடீரென மழை கொட்டோ கொட்டு என்று கொட்டி, எங்கும் வெள்ளக்காடானால், அந்த வருடம் சாப்பாட்டு நெல்லுக்கே பஞ்சம்தான். இதுதான் விவசாயிகளின் கதை. பரம்பரையாகச் செய்து வரும் விவசாயத்தைத்தவிர வேறு தொழில் தெரியாத தஞ்சை விவசாயிகளின் அசலான வாழ்க்கை நாவலில் பதிவாகியுள்ளது.

சரவணனின் அம்மாவின் காதுக்கும் கழுத்துக்கும் போட்டுக்கொள்ள கவரிங் நகைக்குக் கூட வழியில்லை. மிராசு என்று பட்டம் இருந்தாலும், ஒழுகுகிற வீட்டுக்கு கீற்று மேய்ந்திடக்கூட அப்பாவிடம் பணம் இல்லை. உழவு வேலைக்காகக் கரம்பத்தூர் வேம்புப் பிள்ளையிடம் கடன் வாங்கி வைத்திருக்கும் பணத்திலிருந்து, கடன் கேட்டு வரும் பங்காளிக்குக் கைமாற்றாகப் பணம் தருகிறார் அப்பா. ஒரு ஜோடி உழவு மாட்டை விற்று வயலுக்கு உரம் வாங்கிப் போட்டுக் கொள்ளலாம் என நினைக்கும் அப்பா, ஒருவகையில் பிழைக்கத் தெரியாத மனிதர். மின் விசிறி, ரேடியோ போன்ற கருவிகள் எதுவுமற்ற வாழ்க்கை.

ஊரார் கேட்ட கோவில் நிலத்தைக் கொடுக்காமல் வழக்குத் தொடர்ந்த குச்சிராயர், ஒருகட்டத்தில், நிலத்தைத் தந்த பிறகும் விடாமல் கேஸ் நடத்துகிறார். வறட்டுக் கௌரவத்திற்காக வீணாகப் பணத்தைச் செலவழிக்கிறார். தனது மூத்த மகனைக் காரைக்குடியில் உள்ள பொறியியல் கல்லூரியில் படிக்க வைக்கிறார். வீட்டில் திருமணத்திற்காகக் காத்திருக்கிறாள் மகள் மைதிலி. கிராமத்து எளிய வாழ்க்கை என்பது மாறி, நுகர்பொருள் பண்பாடு மெல்ல நுழையும் போது, விவசாயம் என்பது கட்டுபிடியாகாமல் போவதை அறியாமல் நிலத்துடன் மல்லுக்கட்டும் அப்பாவின் கடன்கள் ஒருபோதும் தீரப்போவது இல்லை என்பதுதான் உண்மை. அம்மாவின் அப்பா இறந்தபோது கடனை வாங்கிச் சிரமத்துடன் கருமாதி செய்முறைகள் செய்த அப்பா, கொட்டுகிற மழையில் குடும்பத்தினருடன் நனைந்தவாறு உட்கார்ந்திருந்தார். அப்பாவுக்கு நாலு வேலி மிராசுதாரர் பெரிய பெயர் இருந்தாலும், யதார்த்ததில் வறுமையான வாழ்க்கை. நிலத்தில் உழல்வதுதான் தனது பொருளியல் பிரச்சினைகளுக்குக் காரணம் என்பதை அறியாதது அப்பா மட்டுமல்ல. தஞ்சை டெல்டாவில் உழவை நம்பி வாழ்கின்ற பெரும்பாலான விவசாயிகள்தான் என்பதை அப்பாவை முன்வைத்து சி.எம்.முத்து சொல்லியுள்ளார்.

அப்பா என்றொரு மனிதர் குச்சிராயர் மட்டுமல்ல. ஒரு மனிதரை முன்வைத்துச் சொல்லப்பட்டுள்ள வீட்டின் கதை. வீட்டில் புழங்கிடும் பெண்கள், பிள்ளைகள், கால்நடைகள், ஊரார், கிராமம் எனப் பரந்துபட்ட பரப்பில் நாவல் விரிந்துள்ளது. சாணமும், நெல்லும் தருகின்ற மண்ணின் வாசனையை நாவல் வாசிப்பில் நுகரலாம்.

கொம்பேறி மூக்கன் கணக்காய் குதியாலம் போட்டுக்கொண்டு ஓடும் மாடுகளையும், கிடை போடும் கீதாரிக் குடும்பங்கள் வலசை போவதையும் வெங்காரி பாய்ந்த வயல்களுக்கு அண்டை போடுவதையும் கட்டிய வயல்களில் மோட்டையைச் சரிபார்ப்பதையும், தகிக்கிற காலங்களில் தானாய் வளர்ந்து கிடக்கும் கருவைக் கூட்டங்களையும் பற்றிய விவரிப்பில் சொக்கங்காணி, சுந்திரிகாணி, சம்பா வட்டம் ஆகிய வயல்களின் வனப்பு வெளிப்படுகிறது. தஞ்சை கிராமங்களின் இயற்கை வளத்தையும், நிலவெளிக் காட்சிகளையும், வேறுபட்ட மனிதர்களையும் பற்றிய விவரிப்பில் மண்ணின் மணம் வீசுகிறது.

1982-இல் கறிச்சோறு நாவல் மூலம் அடியெடுத்த வைத்த சி.எம்.முத்து, தஞ்சை மண்ணின் மணத்துடன் கள்ளர் சமூகத்தினரிடையே நிலவும் சாதிய உள்ளடுக்குப் பிரச்சினையை முன் வைத்திருந்தார். அது இப்படியான விஷயம் கொலையில் போய் முடியுமா? என்ற கேள்வியையும் வாசிப்பினில் தந்தது. கிராமத்தில் உறவினர்கள் இடையில் திருமணம் காரணமாக ஏற்படும் மோதல்களை விவரித்த பொறுப்பு நாவல், ஒரு காலகட்டத்தின் பதிவு. வயலில் வேலை செய்யும் தலித் பெண்களைப் பாலியல் வல்லுறவுக்குள்ளும் ஆதிக்க சாதியினரின் அடாவடித்தனம் பற்றிய நெஞ்சின் நடுவே நாவலுக்கு மாற்றாக வேரடி மண் நாவல், தலித்துகளின் எழுச்சியைச் சித்திரித்துள்ளது. அப்பா என்றொரு மனிதர் நாவலில் வரும் மனிதர், தஞ்சை மண்ணில் வாழும் சிறு விவசாயிதான். கடந்த ஐம்பதாண்டுகளில் தஞ்சை வட்டாரத்தில் நடைபெற்ற சம்பவங்களுக்குச் சாட்சியாக விளங்கும் சி.எம்.முத்து, தனது வாழ்வில் எதிர்கொண்ட விஷயங்களுக்கு முன்னுரிமை தந்து நாவல்களைப் படைத்துள்ளார்.

தஞ்சை நிலத்தை முன்வைத்து வட்டார மொழியில் விரிந்திடும் நாவல்களைப் படைத்துள்ள சி.எம் .முத்துவின் கதைசொல்லல், பாத்திரப்படைப்பு, மொழி நடை போன்றன இனவரைவியல் தன்மையுடன் தனித்திருக்கின்றன. அவருடைய எல்லா நாவல்களிலும் முடிவு என்பது எதுவும் இல்லை. நாவலின் போக்கு, திடீரென அறுபட்டது போல முடிவது, எதுவும் முடியாதது என்பதைச் சூசகமாக உணர்த்துகிறது. துல்லியமான முடிவுகள் எதையும் எந்தப் பாத்திரத்தின் மீதும் திணிக்காமல், யதார்த்த வாழ்க்கையில் இப்படியெல்லாம் நடக்கலாம் என்பதைப் பாசாங்கற்றுப் புனைவாக்கியதில் சி.எம்.முத்துவின் படைப்பாளுமை தனித்துவமானது. தஞ்சை வட்டாரத்து மக்களின் இயற்கைச் சூழல், சாதியக் கட்டுமானம், பெண்கள் நிலை, சமுதாய அடுக்கு,, பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் போன்றவற்றைப் பற்றிய விவரிப்புடன் கள ஆய்வையும் அனுபவவாதத்தையும் அடிப்படையாகக்கொண்ட இனவரைவியல் தன்மையுடன் கூடிய சி.எம்.முத்துவின் நாவல்கள், சமகாலத்தின் பதிவுகளாகும்.